அ.வ.எண்.247/2017 24.03.2022

வா.சா.1 நாராயண சாமி

வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.

நான் பி.ஏ படித்துள்ளேன். இந்த வழக்கில் நான் வாதி. 1ம் வாதி எனது அக்கா. நானும் 1ம் வாதியும் பன்னார்கட்டா சர்கிலில் தனிதனியாக வசிக்கிறோம். 1ம் வாதிக்கு 2016 ல் திருமணம் நடைபெற்றது. எனது அக்காவிற்கு பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. எனது அக்காவின்திருமணத்தை எனது பெற்றோர் தான் முன்னின்று நடத்தி வைத்தார்கள். எனது அக்காவிற்கு திருமணம் ஆன பின்பு எனது பெற்றோருக்கு கருத்து வேறுபாது ஏற்பட்டு அவர்கள் இருவரும் 2016 வருடம் முதல் பிரிந்து வசிக்கிறார்கள். எனது அப்பாவும் ,அம்மாவும் பிரிந்த பின்பு தான் 2017 ல் நானும் எனது அக்காவும் இந்த வழக்கு தாக்கல் செய்தோம். நானும் எனது அக்காவும் எனது அப்பாவின் குடும்பத்தார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்லி தான் தாவா சொத்துக்களின் விவரங்களை பற்றி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள். தாவா சொத்துக்கள் திக்கடரப்பள்ளியில் உள்ளது. தவா சொத்துக்கள் சர்வே எண். 181/சி ல் உள்ளது. 5சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளது.சர்வே எண்கள் எனக்கு ஞாபகம் இல்லை.அது பற்றி வழக்குரையில் சொல்லியுள்ளேன். 2 ஏக்கர் நிலத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்துக்கள் அனைத்தும் அருகருகே உள்ளது. கடன் கொடுத்தவர்கள் தாவா சொத்தில் விவசாயம் செய்கிறார். தற்பொழுத தவா சொத்துக்களில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்கள்ஆதியில் எனது தாத்தா முனியப்பாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது. தாவா சொத்துக்களை எனது தாத்தா முனியப்பா 1961 ல் கிரயம் பெற்றுள்ளார். 1961 ல் என் தாத்தா எந்தெந்த சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்று எனக்கு சர்வே எண்கள் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1ல் 4/1 ,4/6 மற்றும் 4/7 ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவற்றை இந்த வழக்க்ல் நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் சர்வே எண். 171/4பி, 180/7ஏ1 ,180/7ஏ2,310/4ஏ,310/3ஏ, ஆகியவற்ளை மட்டும் என் தாத்தா 1961 ல் கிரயம் பெற்றதாக நான் சொல்லியுள்ளேன். தாவாவில் சர்வே எண். 310/3ஏ சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் அதை நான் பார்க்கவில்லை. என் தாத்தா முனியப்பா தற்பொழுத உயிருடன் இல்லை. என் தாத்தாவிற்கு 2பேர் மனைவிகள்.வெங்கடலட்சுமி, மற்றும் முனியம்மா. வெங்கடலட்சுமிக்கு வெங்கடேசப்பா என்ற ஒரே வாரிசு. முனியம்மாவிற்கு 5 பேர் வாரிசுகள்.அவர்கள் பாப்பையா,ரத்தினம்மா, மற்றவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.மேற்படி பாப்பயை தான் என் அப்பா.1ம் பிரதிவாதி. எனது பாட்டிபெயர் வெங்கடம்மமா என்று சொன்னால் சரிதான். ஆனால் அவரை முனியம்மா என்றுஅழைப்பார்கள். வெங்கடம்மாவிற்கு 4 பெண்கள். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் தான் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். எனது பெரிய அத்தை பெயர் குச்சம்மா என்று சொன்னால் சரிதான்.அவர் இறந்துவிட்டார். குச்சம்மாவின் குழந்தைகள் பெயர் ஆனந்தா , பத்மா மற்றொருவர் பெயர் எனக்குத் தெரியாது.மேற்படி குச்சம்மாவின் வாரிசுகள் தான் 8 முதல் 11 பிரதவாதிகள் என்று சொன்னால் சரிதான். என் தாத்தாவின் முதல் மனைவி பெயர்

சுப்பம்மா என்று சொன்னால் அது எனக்கு சரியாகதெரியாது. மேற்படி சுப்பாம்மாவின் வாரிசுகள் தான் 2,3 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். சுப்பம்மா இறந்தபின்பு தான் என் தாத்தா வெங்கடம்மாவை திருமணம் செய்தார் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் தாத்தா இறந்த பின்பு அவரது இரண்டு மனைவிகளின் வாரிசுகளும் 2002 ம் வருடம் வாய்மொழியாக என்தாத்தாவின்சொத்துக்களைபாம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. வாய்மொழியாக பாகம் ஏற்பட்ட பின்பு எனது தாத்தாவின் வாரிசுகள் தனி தனியாக சுவாதீனத்தில் இருந்தார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. சர்வே எண். 171/4பி ல்˙50 செண்ட், 180/7ஏ1 ல் 30 செனட்ம் , 310/4ஏல் 20 செனட்ம் , 2வதுபிரதிவாதிக்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 180/7ஏ1 1 1/4 செண்ட் ம் , 180/7ஏ2 ல் 1 1/4 செனட்ம் , 171/4 பி ல் 1 ஏக்கர் 12 செண்ட் ம் 1 மற்றும் 4 முதல் 11 பிரதிவாதிகளுக்கு பாகமாககொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் சரியான முறையில் சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை. வாய்மொழியாக கொடுக்கப்பட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் அவருடன் பிறந்தவர்களும் 2016 ல் பாகப்பரிவினை செய்து கொண்டு பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.ஆனால் அவர்கள் செய்தது தவறு. எனது அப்பாவிற்கு குறைவாக பாகம் கொடுத்துள்ளார்கள். சர்வே எண். 180/7எ1 மற்றும் 180/7ஏ2 ஆகிய சொத்துக்கள் சுமார் 10 லட்சத்திற்கு மேல் மதிப்பிருக்கும்ள ன்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. எனது அப்பாவிற்கு சர்வே எண். 180/7ஏ1 , சர்வே எண். 180/7ஏ2,மற்றும் 171/4பி ல் உள்ள 12 சென்ட் நிலத்தை எனது அப்பாவிற்கு பாகமாக கொடுத்துள்ளர்கள் என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 180/ஏ 1 மற்றும் 180/7ஏ2 சொத்துக்களின் மதிப்பு அ திகமாகஇருந்ததால் ச ர்வே எண். 171/4பில் எனது அப்பாவிற்கு 12 சென்ட்நிலம் கொடுத்தார்கள் என்று சொன்னால் எனக்கு மதிப்பு தெரியாது. சர்வே எண். 171/4பி ல் 4முதல் 7 பிரதிவாதிகளுக்கு தலா 20 சென்ட் நிலம் கொடுத் துள்ளார்கள் என்றும் 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கும் மேற்படி சர்வே எண்ணில் 20 சென்ட் ம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.